**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 153/2022

நாள்: 08.06.2026

பெயர்: பழனியம்மாள் (பி.வா.சா.2) க/பெ: வேலாயுதம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1. நான் பிறந்த ஊர் புதுபாளையம் என்றால் சரிதான். எனது மாமனார் பெயர் தர்மன் என்றால் சரிதான். எனது மாமனாருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அவருக்கு 7 பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் 6 ஆண் வாரிசுகள் 1 பெண் வாரிசு. எனது மானார் தர்மன் இறந்து விட்டார். எனது மாமனாரின் வாரிசுகள் அவர்களுக்குள் பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது கணவருடன் உடன் பிறந்தவர்ளிடம் இருந்து நான் ஏதும் கிரயம் பெற்றேனா என்றால் இல்லை. எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 பட்டா என் பெயரில் உள்ளது என்றும் ஆனால் அது எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒப்பம்/–பழனியம்மாள்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/–S.தனலெட்சுமி

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

ஜெயங்கொண்டம்